**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal procedure)

**IN THE COURT OF** Judicial Magistrate, Nanguneri

Calendar
Miscellaneous } CC.No. 377/2017
Preliminary register
Sessions

Deposition Of Witness for { Prosecution PW 3
Defense
Court

Name **திரு. ஆனந்தன்**

Husband Name / Father's Name

Village

Taluk

Religion Muslim/Christian/Hindu

Age /2024

*எதிரி ஆஜர்.*

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 22nd day of March 2024.

நான் தற்போது மூலைக்கரைப்பட்டி காவல்நிலையத்தில் எஸ்எஸ்ஐ ஆக பணிபுரிந்து வருகிறேன். ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 17.12.2016 ஆம் தேதி த.கா முத்து திலகர் என்பவர் நிலைய பொறுப்பிலிருந்த போது அங்கு உள்நோயளியாக சிகிச்சையிலிருந்த மகாராஜன் மகன் மகாராஜன் என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்று அதன் தன்மைகேற்ப குற்ற எண். 153/2016 இதச பிரிவுகள் 294(பி), 323, 506(1) என்ற வழக்கை பதிவு செய்தார். அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.2** ஆகும். முதல் தகவலறிக்கை **அ.சா.ஆ.3** ஆகும்.

புகார் வாக்குமூலம் அசல் தகவலறிக்கையுடன் இணைத்து கனம் நான்குநேரி நீதிமன்றம் அனுப்பியும் சம்மந்தப்பட்ட நகல்களை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், விசாரணை நகலை உதவி ஆய்வாளர் கதிரேசன் அவர்கள் பார்வைக்கு வைத்தார். அவர் விசாரணை நகலை எடுத்துகொண்டு 18.12.2016 ஆம் தேதி காலை 09.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தையும் அதன் சுற்றுபுறங்களையும் சாட்சிகள் கல்யாணசுந்தரம், சங்கரன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தார். அந்த

பார்வை மகஜர் **<u>அ.சா.ஆ.4</u>** ஆகும். மாதிரி வரைபடம் **<u>அ.சா.ஆ.5</u>** ஆகும்.

சாட்சிகள் மகாராஜன், பகவதி, மாடசாமி, சுடலைமுத்து, முத்துதிலகர் ஆகியோர்களை விசாரணை செய்து அவர்களுடைய வாக்குமூலங்களை பதிவு செய்தார். வாதிக்கு காயச்சான்றிதழ் வழங்கிய மருத்துவர், லூரத்து சாண்டி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மருத்துவர் வாதிக்கு ஏற்பட்ட காயம் கொடுங் காயம் என்று சான்று வழங்கியுள்ளார். அவர் அளித்த காயச்சான்றிதழ் **<u>அ.சா.ஆ.6</u>** ஆகும்.

எதிரி நீதிமன்றத்தில் சரணடைந்ததால் எதிரி கைது செய்யபடவில்லை.

வழக்கின் சட்டபிரிவினை பிரிவு மாற்றுதால் அறிக்கை மூலம் இதச பிரிவுகள் 294(பி), 323, 506(1) லிருந்து 294(பி), 325, 506(1) ஆக மாற்றம் செய்துள்ளார் அந்த பிரிவு மாற்றுதல் அறிக்கை **<u>அ.சா.ஆ.7</u>** ஆகும்.

புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் புலன் விசாரணையிலும் எதிரிகள் குற்றபுரிந்தது உண்மை என தெரியவந்ததால் எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 325, 506(1) ன் படி குற்றப்பத்ரிக்கை தாக்கல் செய்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் வைத்து தயார் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. புகார்தாரருக்கு ஏற்பட்ட காயத்திற்கும் எதிரிக்கும் எந்த தொடர்பு இல்லை என்றால் சரியல்ல. புகார்தாரரிடம் எழுதாத வெள்ளைதாளில் கையெழுத்து வாங்கிக்கொண்டு புகார் என்னால் தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல. சொன்ன நாள், இடம், விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. வழக்கை சரிவர புலன்விசாரணை செய்யாமல் எதிரி மீது வழக்கு தாக்கல் செய்து குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.